அள்ளித் தெளிக்கும் அலங்கோலம்!

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணா | சென்னை: ஆவணி 22உ செவ்வாய் (7—9—54) | மலர்: 2
இலங்கையில் 10 சதம் | வெளியூர்: ஆவணி 23உ புதன் (8—9—54) | இதழ்: 73

இலங்கை ஆளும் கட்சியில் பிளவு!

அமெரிக்க ஆதிக்கத்திற்கு எதிர்ப்பு

ஒரு பிரிவினர் விலகி தனிக் கட்சி அமைப்பர்?

கொழும்பு, செப். 5—

இலங்கையின் ஆட்சி பீடத்தில் அமர்ந்திருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியில் பெரும் பிளவு ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. முன்னாள் அமைச்சர் டட்லி சேனநாயகாவிற்கும், வர்த்தக அமைச்சர் ஆர். ஜி. சேனநாயகாவிற்கும் இடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டு, இருவர் தலைமையிலும் உள்ள இரு கோஷ்டியினரும் மோதிக்கொள்ளும் நிலை ஏற்பட்டிருக்கிறதாம். செல்வாக்கு உள்ள ஒரு கட்சியினர் பிரிந்து தனிக் கட்சி அமைப்பார்கள் என்று தெரிகிறது.

இலங்கைப் பிரதமர் கொத்தலாவலை அமெரிக்கா செல்வது கூடாது என்று ஆர். ஜி. சேனநாயகா கண்டித்தார் என்று தெரிகிறது.

கொத்தலாவலை வாஷிங்டன் சென்றதன் மூலம் 'சீட்டோ'வில் கலந்துகொள்ள ஒப்புக்கொண்டார். அணுகுண்டு பரிசோதனையை நடத்த இலங்கை பயன்படுத்தப்படும் என்று சேனநாயகா கூறியதாகத் தெரிகிறது.

அமெரிக்காவுடன் இலங்கை கூட்டு சேரக் கூடாதென்று அவர் வன்மையாகக் கண்டித்தார் என்று தெரிகிறது.

அரிசி ஏற்றுமதிக்கு அனுமதி; இறக்குமதியும் நடைபெறும்

ஏழைகளைப் பாதிக்கும் செயல்!

இந்திய சர்க்காரின் அர்த்தமற்ற போக்கு!

தென்னாட்டு உறுப்பினர்களின் எதிர்ப்பு

உண்மை நிலை உணராத டில்லி சர்க்கார்!

அமைச்சருக்கு உறுப்பினர்களின் தெளிவுரை

நாட்டிலே உணவுப் பஞ்சம் போய்விட்டதா என்பது இன்னும் உறுதியாகவில்லை; வடநாட்டில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தினால் லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களில் பயிர்கள் நாசமாகிவிட்டன என்று அறிவிக்கப்பட்டுள்ளது; ஆனால், வெள்ளம் வருவதற்கு முன்னும், பின்னும், 'உணவுப் பொருள் நிலைமை நன்றாக இருக்கிறது,' என்று அமைச்சர் கித்வாய் பேசி வந்துள்ளார்.

உள்நாட்டு மக்களின் தேவைக்குப் போதுமான, அவர்கள் வாங்கும் நிலையில்—விலை வாசிகள் இல்லாத நிலையில், அரிசியை ஏற்றுமதி செய்து, அதன் மூலம் உணவுப் பொருள்களின் விலையை உயர்த்த இந்திய சர்க்கார் முயற்சி செய்கின்றனர்.

கீழிறங்கிவிடும் விலைவாசிகளின் சரிவைத் தடுத்து, முதலாளிகளுக்கு ஊக்கமளிக்க உறுதி அளித்த இந்திய சர்க்கார், இப்போது செய்துள்ள முடிவுகளால் உணவுப் பொருள்களின் விலை ஏற்றத்தையே காண முடியும் என்பது நிச்சயம்.

ஏற்றுமதி செய்கிறார்களே, இனிமேல் அரிசி இறக்குமதி இருக்காதோ என்றால், பர்மாவிலிருந்து அரிசி இறக்குமதி செய்யப்படும் என்று சர்க்கார் தரப்பில் கூறப்பட்டிருக்கிறது.

★

இந்திய சர்க்கார், பம்பாய், கல்கத்தா துறைமுகங்களிலிருந்து இரண்டு லட்சம் டன் அரிசியை ஏற்றுமதி செய்வதென்று முடிவு செய்திருக்கின்றனர். அரிசியின் உள்நாட்டு விலைக்கும், வெளிநாட்டு விலைக்கும் அதிக வேற்றுமையிருப்பதால் ஏற்றுமதி வரியை அதிகரிக்க மத்திய சர்க்கார் அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி மக்கள் சபையின் அனுமதியைப் பெற்றிருக்கிறார்.

நாட்டிலே உணவுப் பொருள்களின் விலை ஏழைகள் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத அளவு உயர்ந்து போயிருக்கும் நிலையில், அரிசியை ஏற்றுமதி செய்வது உள்நாட்டில் அரிசியின் விலை உயர்ந்து, ஏழைகளைப் பாதிக்கும் என்பதை மக்கள் சபையில் பலர் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

"அரிசியை ஏற்றுமதி செய்ய வேண்டுமென்ற முடிவில் இருக்கும் சர்க்கார், உள்நாட்டு விலைகளின் போக்கைக் கவனிக்க வேண்டும்; மக்களின் தேவைகளைப் பாதிக்கும் என்ற நிலைமை ஏற்படுமானால் ஏற்றுமதியை உடனே நிறுத்திவிட வேண்டும்,"

என்று, டி. எஸ். அவினாசிலிங்கம் வற்புறுத்தியிருக்கிறார்.

"பர்மாவிலிருந்து அரிசியை இறக்குமதி செய்யப்பட வேண்டும்; தென்னாட்டில், குறிப்பாக, மலபாரில் உள்ள உழைக்கும் வகுப்பினருக்கு அது தேவைப்படுகிறது,"

என்று, அவர் மேலும் கூறினார்.

'வடநாட்டில் வெள்ளச் சேதம் ஏற்பட்டிருப்பதை ஒட்டிய நிலைமையை சரிவரக் கவனிக்க வேண்டும்; அரிசியின் பற்றாக்குறை ஏற்படுமானால் அது தென்னாட்டு மக்களையே பாதிக்கும்; ஆகவே, இந்த நிலைமையில் அரிசி ஏற்றுமதியைத் தடை செய்வதே கருத்

(4-ம் பக்கம் பார்க்க)

நைஜீரியாவில் கலகம்

அரசியல் கட்சிகளிடையே கைகலப்பு!

6 பேர் மரணம்; 23 பேருக்குக் காயம்

லாகோஸ், செப். 6—

நைஜீரியாவில் ஓயோ என்னுமிடத்தில் இரு அரசியல் கட்சிகளுக்கிடையே கலகம் நடைபெற்றதால் ஆறு பேர் கொல்லப்பட்டனர்; 23 பேர் காயமுற்றனர் என்று தெரிகிறது.

இந்த நகரில் 45 000 மக்கள் வாழ்கிறார்கள்; நைஜீரிய தேசியக் கவுன்சில், காமரூன்ஸ் என்ற இரு கட்சியினரும் சேர்ந்து ஏற்பாடு செய்திருந்த கூட்டமொன்றில் கலகம் மூண்டதாம்.

காமரூன்ஸ் கட்சியினர் மக்களிடையே செல்வாக்கு பெற்ற

(4-ம் பக்கம் பார்க்க)

யுத்தம் திடீரென மூளும்!

போர்ப் பிரகடனம் அநாகரீகமானது!

மேற்கு வல்லரசுகளுக்கு சர்ச்சில் எச்சரிக்கை

பிரின்ஹில், செப். 6—

பிரிட்டிஷ் முதலமைச்சர் வின்ஸ்டன் சர்ச்சில், விமானப் படையினரிடத்தில் பேசுகையில், "கடந்த 14 ஆண்டுகட்கு முன்பு போன்றே இப்போதும், யுத்தப் பிரகடனத்திற்கும், யுத்த சோதனைக்கும் இடையில் அதே அளவு இடைக்காலம் கிடைக்கும் என்று மேற்கத்திய வல்லரசுகள் நம்ப முடியாது," என்று குறிப்பிட்டார்.

யுத்தம் திடீரெனத் தோன்றக் கூடும் என்ற பொருள் படும்படி அவர் மேலும் பேசுகையில், "இந்த விஞ்ஞான சகாப்தத்தில்—வெறுப்பு உணர்வு, பொறுப்பற்ற பேச்சுகள் இவை மனித சமுதாயத் திட்டம் வளர்ந்துள்ள இந்த சகாப்தத்தில்—யுத்தப் பிரகடனங்கள் உண்மையிலேயே அவையாகவே அநாகரீகமானதாகிவிட்டன" என்று குறிப்பிட்டார்.

உரிமையைப் பறிக்கும் விருது!

பார்மோசாமீது கம்யூனிஸ்டு விமானங்கள் பறந்தன!

அமெரிக்க கப்பற் படை ஜரூராகிறது!

தைப்பே, செப். 6—

கம்யூனிஸ்டு சீனாவின் குண்டு பொழியும் விமானங்கள் முதன் முறையாக இன்று, பார்மோசாவின் உயரப் பறந்தன.

அங்கு விரட்டப்பட்டு ஒதுங்கியுள்ள தேசிய சீன சர்க்காருடைய விமானப் பாதுகாப்புப் பீரங்கிகளும், மும்முரமாக வேலை செய்தன.

அவை இரண்டு மணி நேரம் இடைவிடாது தொடர்ந்து பாதுகாப்பு வேலையில் ஈடுபட்டிருந்ததாகவும் தெரிகிறது.

தைப்பேயைச் சுற்றியுள்ள பிரதேசங்களில் இனம் தெரியாத கம்யூனிஸ்டு விமானங்கள் நேற்று பறந்ததை ஒட்டி, அங்குள்ள அமெரிக்க 7-வது கப்பல் படையினர் ஜரூராயினராம்.

இந்த நிகழ்ச்சியை ஒட்டி, பார்மோசாவில் உள்ள அமெரிக்க அதிகாரிகளும், தேசிய சீன அதிகாரிகளும் விசேடக் கூட்டமொன்றில் கலந்து பேச்சுவார்த்தைகள் நடத்தியதாகத் தெரிகிறது.

பார்மோசாவிற்கு எதிரில் உள்ள சீனக் கடற்கரை ஓரங்களில் கம்யூனிஸ்ட் துருப்புகள் ஏராளமாகக் குவிந்து கொண்டிருப்பதாக உளவறிந்ததை ஒட்டி, தேசிய சீனத் துப்பு பரியும் இலாகாவினர் ஆராய்ந்து கொண்டிருக்கின்றனர்

(4-ம் பக்கம் பார்க்க)

தன்னலமற்ற தன்மையைப் புண்படுத்துகிறது!

பட்டம் பெறுவது என் பரம்பரைப் பண்பல்ல!

'பத்ம விபூஷன்' பட்டத்தை மறுத்து மதானி விளக்கம்

புதுடில்லி, செப். 6—

"பத்ம விபூஷன்" என்று தனக்களிக்கப்பட்டுள்ள பட்டத்தை ஏற்றுக்கொள்ள இயலாதென்று குடியரசுத் தலைவர் ராசேந்திர பிரசாத்திற்கு ஜமயத்-உலேமா-ஹிந்த் என்ற நிறுவனத்தின் தலைவர் மௌலானா உசேன் அகமத் மதானி என்பவர் தெரிவித்திருக்கிறார்.

அவர், ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாவது:—

'இந்தப் பட்டமளிப்பு, எடுத்துச் சொல்லும் உரிமைக்கு உலை வைப்பதாயும், நாட்டில் உள்ள தன்னலமற்ற சேவை புரிவோரின் மாசற்ற குணத்தை புண்படுத்துவதாயும் உள்ளது," என்று குறிப்பிட்டு விட்டு, "இந்தப் பட்டமளிப்பு, என்னுடைய முன்னோர்களின் கொள்கைகளுக்கும், பரம்பரை பழக்கங்களுக்கும் புறம்பானதாயிருப்பதால் எனக்களிக்கப்பட்டுள்ள பட்டத்தை நன்றியுடன் திருப்பி அனுப்ப வேண்டிய அவசியத்திலிருக்கிறேன்," என்றும் குறிப்பிட்டுள்ளார்.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 7—9—54 செவ்வாய்

ஒன்று சேருவீர்!

"வெள்ளையன் நம்மைச் சுரண்டுகிறான்!

"மான்செஸ்டரும், லங்காஷயரும் நம்மை ஓடெடுக்கச் செய்கின்றன!

"ஷெபீல்டும், செண்டரும் நம் பொருளாதாரத்தையே நாசமாக்குகின்றன!

"நாட்டைச் சுரண்டும் இந்த அந்நிய நாட்டு முதலாளி ஒழிய வேண்டும்!

"நம் நாடு சுதந்திரம் பெற்று எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும்!

"சுரண்டல் முறை இந்த உபகண்டத்திலிருந்தே ஒழிய வேண்டும்!"

என்றெல்லாம் முழக்கமிட்டனர், உரிமைப் போர் நடத்திய காங்கிரஸ்காரர்கள்!

"ஆமப்பா, உன் வார்த்தை மெய்தானப்பா; ஆனால், சுதந்திரம் வந்தபின் நீ என்னப்பா செய்யப்போகிறாய்?" என்று கேட்டனர், அரசியல் தெரிந்தவர்கள்!

அன்னவர்களைப் பதிலாகத் தந்த தேசியத் தோழர்கள், "சுதந்திரம் வந்தவுடன், பாருங்கள்!" என்று பெருமிதத்துடன் கூறினர்!

சுதந்திரம் வந்தது!

ஏழாண்டுகளும் ஓடிவிட்டன!

ஆனால், இன்றுவரை காங்கிரஸ் சாதித்தது என்ன? சாதிக்கப் போவது என்ன? சாதிக்கக் கூடியதுதான் என்ன?

நாட்டின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டோர் யாவரும், இந்த கேள்விகளுக்கும் பதில் தெரிந்து கொள்ளத்தான் ஆசைப்படுவர்!

உலகத்தில் இன்றைக்கு இருக்கும் பிரச்னை—என்—என்றுமே இருந்து வந்த பிரச்னை, உள்ளவன்—இல்லாதவன் இருவருக்குமுள்ள பேதம்தான்!

உழுது பயிரிட்டவனை ஊர்க் கோடியில் தள்ளிவிட்டு, உண்டு கொழுக்கிறான், நில உரிமையாளன்!

உழைத்தவனை அரைப் பட்டினியாக்கிவிட்டு, அவன் உழைப்பில் உல்லாச வாழ்வு நடத்துகிறான், முதலாளி!

இந்த அக்கிரமம், பரம்பரை பரம்பரையாக வந்து கொண்டிருக்கிறது!

ஏழை ஏமாளிக்கப்படுவதும், எத்தர்கள் ஏற்றமடைவதும், மனித சமுதாயத்தின் சோகக் கதை!

இதற்கும் பரிகாரம் தேடுவதுதான், மனித வாழ்வில், மக்கள் நலனில் அக்கறை கொண்டோர் செய்ய வேண்டிய பெரும் பணி!

இந்தப் பெரும் பணியை மேற்கொண்ட காரணத்தினால் தான்; அதை நிறைவேற்ற முக்கிய தடையாக இருந்த வெள்ளை ஏகாதிபத்தியம் ஒழிந்தவுடன், நமது மகிழ்ச்சியைத் தெரிவித்தோம்!

அதற்கு அடுத்த கட்டமாக, பதவியில் அமர்ந்துவிட்ட காங்கிரஸ், தன் குறிக்கோளின் எந்த அளவு செல்கிறது என்று கவனித்தோம்!

மக்கள் நலனில் அக்கறை கொண்டிருந்தவர்களாக இருந்திருந்தால், இந்திய உபகண்டத்தை அதன் மொழி, கலாச்சார, இனவழியாகப் பிரித்து, சுய நிர்ணய உரிமைகள் கொண்ட நாட்டின் கூட்டாட்சியை நிறுவியிருக்கலாம்; இந்த உபகண்டத்திலே வேரூன்றிப்போன பழமையையும், வைதீகத்தையும் பிடுங்கி எறிந்திருக்கலாம்; வெள்ளையன் ஆதிபத்தியம் ஒழிந்தகையோடு, முதலாளித்துவ ஆதிபத்தியத்திற்கே முற்றும் புள்ளி வைத்துவிட்டு, தொழிலரசை நிறுவி இருக்கலாம்; பேதா பேதமற்ற சமுதாயத்தை உண்டாக்கியிருக்கலாம்; இந்தக் காரியங்களுக்கான பெரும் ஆரம்ப விழாவை நடத்தியிருக்கலாம்!

மனித சமுதாயத்திற்கு மகத்தான தொண்டு செய்த புகழை, காங்கிரஸ் பெற்றிருக்கும்! காந்தியாரும், நேருவும், மக்கள் மனதில் மதிப்பிற்குரிய இடத்தைப் பெற்றிருப்பர்!

ஆனால், இந்த நல்ல வழிகளில் காங்கிரஸ் ஆளியும் செல்லவே இல்லை; மாறாக அதற்கு நேர் எதிரான வழியில் சென்றுவிட்டது!

சுதந்திரம் பெற்ற சின்னாட்களிலேயே கூறினோம்—

'காங்கிரஸ், இந்திய உபகண்டத்தைக் கட்டியாளும் ஆதிக்க மனப்பான்மை பெறுகிறது,'—என்று!

'காங்கிரஸை, பண்பற்ற இந்தி வெறியர்கள் ஆட்கொண்டு விட்டனர்,'—என்று!

'பழம் பெருமை பேசும் வைதீகர்களின் கூடாரமாகிறது,'—என்று!

'பணம் படைத்தோரின் பாசறையாகிறது,'—என்று!

காங்கிரஸ் தோழர்கள் கோபம் கொண்டனர்; ஆனால் செயலில் இன்னும் மட்டமாகின்றனர்!

வடநாட்டுப் பிடியின் கீழ் பலமாகச் சிக்கிய காங்கிரஸ், அதன் சர்வாதிகாரப் போக்கிலிருந்து மாற முடியாமல் திராவிடத்தின் இந்தியைத் திணித்தது!

கபூரும், வைதீகர்கள் காங்கிரஸில் ஆதிக்கம் பெற்றனர்!

முதலாளிகளுக்கு என்னென்ன சலுகைகள் வேண்டுமோ அவ்வளவையும் கொடுத்து, ஏழை பஞ்சையாகவும், பணக்காரன் இன்னும் கொழுக்கவும் வழி செய்து கொடுக்கப்பட்டது—இல்லை—காங்கிரஸே, மாளிகை வாசிகளிடம் புகுந்தது!

இந்த மாற்றத்தால் ஏற்பட்டிருக்கும் ஆபத்து மகத்தானது. வெள்ளை முதலாளிகள் சுரண்டுவதை எதிர்த்துக் கூறி, அவர்களை வெளியேற்றிய பின், இன்று, வடநாட்டு பனியாக்களிடம் நாடு அடைமைப்பட்டுக் கொண்டிருக்கிறது!

காங்கிரஸ், முதலாளிகளின் கூடாரமாகி, அதன் பலனாக நாட்டிலே தீர்க்கப்பட வேண்டிய, 'உள்ளவன்—இல்லாதவன்' பிரச்னை தீர்க்கப்படாமல் போனது மாத்திரமல்ல; அதற்கும் பதிலாக, உள்ளவன்—இல்லாதவனை இன்னும் கசக்கிப் பிழிய வழியும் வகுக்கப்படுகிறது!

நாட்டிலே ஏழாண்டுகளாக நடந்து வரும் காங்கிரஸ் ஆட்சியில் ஏற்பட்டிருக்கும் மாறுதல்—ஒரே ஒரு மாறுதல்—வெள்ளை முதலாளிகளுக்கும் பதில் கருப்பு முதலாளிகள் தோன்றியிருப்பதுதான்!

இதைத்தான் அவ்வப்போது எடுத்துக் கூறி, நமது குறிக்கோளாகிய பொதுவுடைமை சமுதாயத்தை உற்பத்தி செய்ய, இந்த வைதீக வடநாட்டோரின் உள்ள தொடர்பை அறுத்து, திராவிடத் திருநாட்டை உண்டாக்க வேண்டுமென்று தர்க்க ரீதியாகக் கூறி வருகிறோம்; ஆதாரங்களைத் தருகிறோம்; புள்ளி விபரங்களை வெளியிடுகிறோம்!

காங்கிரஸ்காரர்களுக்குக் கோபம் வருகிறது; அடக்கு முறை வீசுகின்றனர்!

மக்கள், எங்கே, வேறு கட்சிகளுக்கு சென்று விடுவார்களோ என்ற பயம் வருகிறது; உடனே, "நாங்களும் ஏழைகளுக்காகத்தான் பேசுகிறோம்; பணக்காரர்களுக்கு இடமே இல்லை; தொழிலாளியை மாற்றுக் கட்சிகள் ஏமாற்றுகின்றன; நாங்கள் தான் அவர்களுக்கு உண்மையாகப் பாடுபடுகின்றவர்கள்!" என்று, நாடு, நகரம் சுற்றி சொல்கின்றனர்; மாற்றுக் கட்சிகளை சாடுகின்றனர்!

இவர்கள் கூற்று எவ்வளவு பொய்யானது என்பதை நாம் கூற வேண்டியதில்லை; இதோ அவர்களே கூறுகிறார்கள், கேளுங்கள்:—

'எஃகு இரும்புத் தொழிற்சாலைகளின் புதிய சீர்திருத்தங்கள் செய்து, உற்பத்தியைப் பெருக்குவதற்காக, டாடாவுக்கு பத்து கோடி ரூபாய்கள் தர இந்திய அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது; இந்தப் பணத்திற்கு முதல் நான்கு ஆண்டுகளுக்கு வட்டி கிடையாது!'

என்கிறார், டெல்லியில் இருக்கும் அர்த்த மந்திரி கிருஷ்ணமாச்சாரி!

தென்னாட்டிலே, ஏழை நெசவாளர்கள் துயர் தீர்க்க பிச்சையெடுக்கின்றன கூட்டுறவு சங்கங்கள்! ஆனால், முதலாளித்துவத்தை நிரந்தரமாக்க, தொழிலாளியின் வரிப் பணத்திலிருந்து பத்து கோடி ரூபாய் வட்டியில்லாக் கடன் கொடுக்கிறது, டெல்லி சர்க்கார்!

படிப்பதோ, பத்தினிக் கதை; தூங்குவதோ, பரத்தையர் வீட்டில்!

தேசியத் தோழர்கள் ஏழைக்கு உழைக்கும் விதம் இப்படித்தான் இருக்கிறது! இந்த பத்து கோடி போல, இன்னும் எத்தனையோ கோடிகள் ஏழைகள் பணம், பணக்காரனை வாழ்விக்க செலவிடப்பட்டிருக்கிறது!

"நாட்டிற்கு வேண்டிய எஃகு, இரும்புகளை உற்பத்தி செய்வதானே ஆகவேண்டும்; அதற்கு அந்தத் துறையிலே மிக சாமர்த்தியமாக நீண்ட காலமாகவும் தொழில்செய்து, ஆலை நடத்திவரும் டாடாவிடம் பணம் கொடுப்பதில் என்ன தப்பு? அந்தப் பணம் நாட்டின் இரும்புத் தேவையை இன்னும் நாலைந்து ஆண்டிலே பூர்த்தி செய்துவிடுமே," என்று தேசியத் தோழர்கள் வாதிடுவர்!

அப்படியானால், நாட்டின் தேவைக்கு முதலாளித்துவத்திடம் தஞ்சம் புகும் பரிதாப நிலை எதற்கு?

மக்கள் வரிப் பணத்தை அள்ளிக் கொடுத்து, தொழிலாளிகளை உறிஞ்சும் முதலாளி வர்க்கத்தை கொழுக்க வைக்கத் தேவையில்லையே!

அதே எஃகு ஆலையை தேசியமயமாக்கி, அதே டாடாவை அந்தத் தொழிற்சாலைக்குத் தலைவராக்கிக் கொண்டு, இரும்பு உற்பத்தியைப் பெருக்கலாமே!

தொழிலாளர்களும், தேச நலனுக்கு உழைக்கிறோம் என்ற உணர்ச்சியில் பெரும் அளவு பாடுபடுவர்! வருகிற உற்பத்தியின் லாபமும் மக்களிடமே வந்து சேரும்!

இந்த நல்ல வழியைவிட்டு, முதலாளிகளுக்கு ஆக்கம் தரும் பிற்போக்கு வழியில், டெல்லி சர்க்கார் போகும் காரணம் என்ன?

அவர்கள் முதலாளிகளிடம் சரண் புகுந்து விட்டதால் தான்!

ஆகவேதான், "காங்கிரஸ், முதலாளிகள் முகாமாய், பணக்காரர்களின் பாசறையாக மாறிவிட்டது; வடநாட்டு முதலாளித்துவ வேங்கையிடம் திராவிடம் சிக்குண்டு தவிக்கிறது; இதை விடுவிக்க வாரீர்! ஏழையை வாழ்விக்க ஒன்று சேருவீர்!!"—என்று கூவுகிறோம், நாம்!

திரவியம் தேடுகிறார்கள்!

"சுரண்டலை அனுமதியோம்; நமது சுகவாழ்விற்குத் திட்டமிடுவோம்," என்பார்கள்!

"'அந்நிய ஆதிக்கம் ஒழிக,' என்றோம்; இப்போது ஆட்சிக்கு வந்ததும், அதை நடைமுறையில் கொண்டு வரப்போகிறோம்," என்று பேசுவார்கள்!

"கோடி கோடியாகக் கொள்ளையடித்துப் போகிறான்; பூனைக் கண்கொண்ட கொடியவன், நாட்டின் தொழில்களை எல்லாம் கைப்பற்றி விட்டான்; இக்கொடுமை போக வேண்டும்; நமது நாட்டுத் தொழில்கள், நமது நாட்டு மூலதனத்திலேயே நடைபெற்றால், அந்நிய நாட்டான் ஏன் சுரண்டுகிறான்?" என்று கேட்பார்கள்!

காங்கிரஸ்காரர்கள், அந்நியரின் சுரண்டலைத் தடுக்கத்தான் பதவி ஏற்பதாகக் கூறினார்கள்; ஆனால், தினந்தோறும் அமெரிக்க மூலதனம் இந்தியாவின் உள்ளே நுழைந்த வண்ணம் இருக்கிறது; எண்ணெய்க் கம்பெனி ஆரம்பிக்கிறார்கள்; இரும்பு, எஃகுத் தொழிற்சாலையில் பங்குதாரர்களாகிறார்கள்!

காங்கிரசார் ஆட்சி வந்தபின்னர் தாங்கள் கூறிவந்த கொள்கைக்கு நேர்மாறாக அந்நிய மூலதனத்தை வரவேற்றார்கள்; நிபந்தனையில்லாத மூலதனம் தேவையென்றார்கள்; 'ஆபத்து எதும் இராது,' என்று உறுதி தந்தார்கள்; இவற்றின் விளைவாக இந்தியாவில் ஏராளமான வெளிநாட்டுக் கம்பெனிகள் இங்கே தொழில் நடத்தத் துவங்கின!

நாட்டு நிர்மாணம், தேசப் புனரமைப்பு, தொழில் அபிவிருத்தி என்றெல்லாம் கூறி, வெளிநாட்டு முதலாளிகள் இங்கே வரவழைக்கப்படுகின்றனர்!

முன்பு அந்நியர்கள், அரசியல் உரிமையுடன் சுரண்டிச் சென்றனர்; இப்போது காங்கிரசாரின் உபசரிப்புடன் சுரண்டுகின்றனர்!

இப்போது இருக்கிற வெளிநாட்டு மூலதனம் போதாது என்று, மீண்டும் வெளிநாடுகளிலிருந்து ஏராளமான பொருளைப் பெற இந்திய நிதி அமைச்சர் தேஷ்முக் உலக சுற்றுப்பயணமே செய்யப் போகிறார்!

காங்கிரஸ் ஆட்சியினர், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நல்ல முறையில் எழுதி முடித்துவிட்டார்களாம்! இது, முதல் திட்டத்தைவிட மிகப் பெரியதாக இருக்குமாம்! ஆகவே, அதை நிறைவேற்ற அதிகமான பணம் தேவைப்படுகிறதென்றும், அப்பணத்தைச் சேகரிக்கவும் தேஷ்முக் வெளிநாடு செல்கிறாராம்!

வாஷிங்டன், ஒட்டாவா, நியூயார்க், லண்டன், பாரிஸ், ஜினீவா, ரோம், கெய்ரோ ஆகிய நகரங்களுக்கு தேஷ்முக் விஜயம் செய்து, ஒவ்வொரு நகரிலும் நான்கு நாட்கள் தங்குவார் என்று தெரிகிறது!

இந்த நகரங்களில் உள்ள பண முதலைகளை எல்லாம் சந்தித்து, "எங்கள் நாட்டில் பெரியதோர் திட்டம் ஒன்றைத் தீட்டியிருக்கிறோம்; நீங்களெல்லாம் அதிலே பயமின்றி பணத்தை முதலீடு செய்ய வேண்டும்," என்று கேட்கப் போகிறாராம்!

உலக பாங்கி, கொழும்புத் திட்டம், அமெரிக்க சர்க்காரின் உதவி இவை போன்ற பொது உதவி, அல்லது கடன் மூலம் கிடைக்கும் மூலதனத்திற்காக அல்ல, தேஷ்முக் இப்போது உலக சுற்றுப் பிரயாணம் செய்வது!

வடநாட்டில் நிறைவேற்ற இருக்கும் ரூர்கிலா இரும்புத் தொழிற்சாலை திட்டத்திற்கான கடனை, உலக பாங்கியிலிருந்து பெற தேஷ்முக் முயற்சி செய்வார்!

சென்ற இரண்டு ஆண்டுகளில் இந்தியாவின் தொழில் அபிவிருத்தியில் தனிப்பட்ட வெளிநாட்டு முதலீட்டில் கணிசமான அபி

(3-ம் பக்கம் பார்க்க)

தி. மு. கழக லட்சியம் உயிரோட்டம் உடையது

பண்டிதர் உலக மேதை என்றாலும் நமக்கு அவர் அந்நியர்தான்

திராவிட அரசுதான் மக்கள் நன்மையைக் கவனிக்கும்!

துறையூர் பொதுக்கூட்டத்தில் அண்ணா சொற்பொழிவு விவரம்

31—8—54ல் துறையூர் நகர தி. மு. கழகச் சார்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை ஆற்றிய சொற்பொழிவின் ஒரு பகுதி நேற்றைய இதழில் வெளிவந்துள்ளது, மற்ற பகுதி இன்று தரப்படுகிறது:—

"தமிழ் நாடெங்கும் தி. மு. கழகம் தினந்தோறும் பல்லாயிரக்கணக்கான மக்களைச் சந்திக்கிறது; மேலும், ஆயிரம் கிளைகளையும், இலட்சத்திற்கு மேற்பட்ட உறுப்பினர்களையும் கொண்டு ஒரு மகத்தான மக்கள் சக்தியாக விளங்குகிறது; அத்தனை பேரும் ஏமாளிகளாக—ஏமாற்றப்பட்டவர்களாக, தி. மு. கழகத்தில் பங்கு பெற்றிருக்கிறார்களென்று யாரேனும் எண்ணினால் அது தவறு; தி. மு. கழகப் பிரச்சாரம் நாள்தோறும் நடந்தவண்ணமுள்ளது; அவர்களது பத்திரிகைகள் பல்லாயிரம் விற்பனையாகின்றன; அவர்கள் தீட்டும் நாடகங்கள் நாட்டவரால் போற்றப்படுகின்றன; அவர்கள் சினிமா எழுதினால், அத்துறையிலேயே ஒரு புரட்சி ஏற்படுகிறது; இத்தனை வளர்ச்சியையும் பெற்றிருப்பது, அவர்களுக்கு எதிர்ப்பில்லாததினால் அல்ல; தி. மு. கழகத்தின் லட்சியமும், கொள்கைகளும் இவ்வளவு வேகமாக பரவி வருவதன் காரணம், அவைகளில் உள்ள உண்மையான சக்திதான்!

'உயிரோட்டமுடைய லட்சியத்தைக் கொண்ட தி. மு. கழகம் பெற்று வரும் முன்னேற்றத்தை, யாரும், எந்தச் சக்தியும் அழித்துவிட முடியாது. தி. மு. கழகத்தாரிடம் நாட்டு மக்கள் கொண்டுள்ள பற்றும் பாசமும், மக்களிடம் இத்தனை செல்வாக்கும் ஏற்பட்டுள்ளதற்குக் காரணம், நாங்கள் இதுவரை எடுத்துச் சொல்லிய கருத்துக்களில் உண்மை இருப்பதாகப் பொதுமக்கள் ஒப்புகிறார்கள் என்பதைத்தான் சொல்லுகிறது.

"'இந்தச் செல்வாக்கை, இந்த மகத்தான சக்தியை என்ன செய்யப் போகிறீர்கள்?' என்று, பலர் கேட்கக்கூடும். இந்த மகத்தான சக்தியை நாட்டு மக்களின் வாழ்வில் புதியதோர் மாற்றம் காண உபயோகிக்க இருக்கிறோம்; உபயோகித்தும் வருகிறோம்.

நம் நாடு நமக்கு தெரியவும், அந்த நாட்டு மக்கள் நன்மக்களாக வாழவும் அவர்களுக்கு நல்லதோர் அரசு வேண்டும்; நல்லதோர் பொருளாதாரத் திட்டம் வேண்டும்.

தி. மு. கழகம், சமுதாயத்தில் நிலவுகிற சீரழிவுகளைப் போக்கவும், பொருளாதாரத் துறையில் நிலவும் ஏற்றத் தாழ்வுகளை நீக்கவும், நல்லதோர் அரசு காணவும் பாடுபட்டு வருகிறது.

நாட்டிலே டாக்டர்கள் பலர் இருப்பர்; அவர்களிலே சிலர் கண் வைத்தியத்தைப் பிரத்தியேகமாகப் படித்திருப்பர்; அவரிடம், கண் நோய்களுக்கு மட்டும் தான் மருத்துவம் பெறமுடியும்; வேறு நோய்களுக்கு அவரிடம் மருந்து கேட்டால், தரமாட்டார்; மருந்து தரத் தெரியாததால் அல்ல; அவர், கண் நோய்களைக் கவனிப்பதற்கெனவே பிரத்தியேகமாகப் படித்தவர்.

அதைப் போலவே, பிரசவம் போன்றவைகட்கும் மருத்துவம் செய்ய பிரத்தியேகப் படிப்பும் படித்தவர்கள் இருப்பர்; எல்லா வியாதிகளுக்கும் மருந்து தரும் வைத்தியர்களும் இருப்பர்; அவர்களிடம், உடலில் வரும் எந்த வியாதிக்கும் மருந்து பெற முடியும்.

அதேபோன்றுதான், இந்த நாட்டில், சில கட்சிகள் குறிப்பிட்ட சில துறைகளில் மட்டும் மக்களுக்கு வாழ்வு தர முயற்சிக்கின்றன.

உதாரணமாக, கம்யூனிஸ்டு கட்சியை எடுத்துக்கொண்டால், அவர்கள், இந்த நாட்டில் நிலவும் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை மட்டும் போக்க முயற்சிக்கிறார்கள்—கண் வைத்தியர்களைப் போல்!

ஆனால் தி. மு. கழகமோ, எல்லா வைத்தியமும் பார்க்கிற மருத்துவ மனையாக விளங்குகிறது.

தி. மு. கழகம்தான் இந்த நாட்டில் எல்லாத் துறைகளிலும் உள்ள சீர்கேடுகளையும் எடுத்துக் காட்டுகிறது.

அதற்குக் காரணம், நம்முடைய நாட்டில் எல்லாத் துறைகளும் கெட்டுவிட்டிருக்கின்றன!

★

இங்கே உள்ள மருத்துவ மனையில் மாதமொன்றுக்கு ரூ. 55 பெறுமானமுள்ள மருந்துதான் தரப்படுவதாகவும், ஆனால், நாள் ஒன்றுக்கு சுமார் 300 நோயாளிகள் சிகிச்சைக்காக மருத்துவ மனை செல்வதாகவும் எனக்கு முன் பேசியவர்கள் குறிப்பிட்டார்கள்.

300 பேர் சிகிச்சை பெற 55 ரூபாய் மருந்துதான் ஒரு அரசாங்கம் தருகிறதென்றால், இதை நாம் எப்படி மக்கள்மீது அக்கறை உள்ள சர்க்கார் என்று ஏற்றுக்கொள்ள முடியும்?

பண்டித நேரு உலக மேதைகளில் ஒருவராகக் கருதப்பட்டாலும் அவர் நமக்கு அந்நியர் தானே! இந்த நாட்டில் மக்களுக்கு மருத்துவ வசதி இல்லையென்றால்—ஏன்—பட்டினியால் பிணம் விழுந்தால்கூட, அவருக்கென்ன அக்கறை இருக்க முடியும்?

எனவேதான், நாட்டு மக்களின் நல்வாழ்வில் அக்கறை கொண்ட ஒரு நல்ல சர்க்கார் தேவை. அந்த சர்க்கார் திராவிட சர்க்காராக, வடநாட்டுக்கு எந்த வகையிலும் கட்டுப்படாத சர்க்காராக இருந்தால்தான், இந்த நாட்டு மக்களின் நல்வாழ்வில் அக்கறை கொள்ள முடியும்."

தூத்துக்குடி சதி வழக்கு விசாரணை

26—8—54ல் நடைபெற்ற தூத்துக்குடி சதிவழக்கு விசாரணையில், சர்க்கார் தரப்பில் சாட்சியளித்த வக்கீல் சேஷய்யங்கார், எதிர்தரப்பு வழக்கறிஞர்களால் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட விவரம் 4—9—54 இதழில் வெளிவந்துள்ளது. மேலும் அவரைக் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட விவரமும், அன்றையத் தினமே விசாரிக்கப்பட்ட மேலும் பல சாட்சிகளின் குறுக்கு விசாரணை விவரமும் இன்று தரப்படுகிறது:—

எதிரிகள் சார்பில் வி. என். கந்தையா குறுக்கு விசாரணை செய்தபொழுது சாட்சி கூறியதாவது:—

"கீழ்க் கோர்ட்டில் சம்பவத்துக்கு முன்னால், 2 அல்லது 3 ஆண்டுகளாக எதிரியைத் தெரியுமென்று சொன்னது சரிதான்; எதிரி குடியிருக்குமிடம் தெரியாது; இன்ஸ்பெக்டர் விசாரணையின்போது நான் எதிரியைப் பற்றி அடையாளம் கூறவில்லை; [illegible] மேற்கிருந்து ஒரு கூட்டம் [illegible] வந்ததாக இன்ஸ்பெக்டரிடம் [illegible] சொல்லியிருக்கிறேன்."

எதிரிகள் சார்பாக [illegible]ம்பரம் குறுக்கு விசாரணை செய்த பொழுது சாட்சி கூறியதாவது:

"சப்-இன்ஸ்பெக்டர் வேலப்பனுக்கு நான் சொ[illegible]ன்; எதிரி சுப்ரமணிய நாடார் கடையில் இருந்ததாக நான் சொல்லவில்லை; சம்பவத்தின்போது, என்னுடன், குமியத் [illegible] இருந்தார்; கூட்டம் வந்தது அவர்களுக்கும் தெரியும்; இந்த ஆட்கள் இருந்ததாக நான் இன்ஸ்பெக்டரிடம் சொல்லியிருக்கிறேன்; இன்ஸ்பெக்டர் விசாரணையின் போது, சப்-இன்ஸ்பெக்டர் வேலப்பன் இல்லை; சம்பவத்தின் போது, வேலப்பன், தூத்துக்குடியில் வேலை பார்த்தார்; வேலப்பன் தூண்டுதலால் நான் பொய் சாட்சி சொல்லவில்லை."

★

நான்காவதாக வக்கீல் பத்மநாபய்யர் சர்க்கார் தரப்பில் விசாரணை செய்யப்பட்டார்.

எதிரிகள் சார்பாக எம். செல்லையப்ப பிள்ளை குறுக்கு விசாரணை செய்தபொழுது சாட்சி கூறியதாவது:

"போலீஸ் ஸ்டேஷனுக்கும் என்னுடைய வீட்டுக்கும் 2-பர்லாங் தூரம் இருக்கும்; நான் எந்தக் கூட்டத்தையும் நேரில் பார்க்கவில்லை; ஸ்டேஷனில் யார் பொறுப்பாக இருந்தார்களென்றும் சொல்ல முடியாது; சப்-இன்ஸ்பெக்டர் இல்லை."

★

அடுத்து, நடராஜ பிள்ளை, சர்க்கார் தரப்பில் சாட்சியாக விசாரிக்கப்பட்டார்.

எதிரிகள் சார்பாக பி. என். கந்தையா பிள்ளை சாட்சியை குறுக்கு விசாரணை செய்த பொழுது சாட்சி கூறியதாவது:—

"15 வருடமாக நான் வக்கீல் தொழில் செய்கிறேன்; புதுக் கிராமமும், சண்முகபுரமும் 1 பர்லாங்குக்குள் இருக்கிறது; கூட்டத்தினர் வந்து கலகம் செய்தது 10 நிமிடம் இருக்கும்; வீட்டுக்குள் நுழைந்தவர்கள் 3 பேர்தான்; வெளியே நின்றவர்கள் சுமார் 25 பேர் இருக்கும்; நான் அவர்களுடன் பேசினேன்; ஆனால், எதிரிகளில் யார் வந்தார்களென்று என்னால் சொல்ல முடியாது; எதிரிகளில் எனக்கு ஒருவரும் தெரியாது; இவர்கள் புதுக்கிராமத்தைச் சேர்ந்தவர்களல்ல; கிரிமினல் கோர்ட்டுக்கு நான் போவதே கிடையாது."

★

அடுத்து, கருப்பசாமி பண்ணையார், சர்க்கார் தரப்பில் சாட்சியாக விசாரிக்கப்பட்டார்.

எதிரிகள் சார்பாக எம். செல்லையப்ப பிள்ளை கேட்ட கேள்விக்கு சாட்சி கூறியதாவது:—

"சம்பவ தினம், ஒரு அப்பீல் போட வக்கீல் வீட்டுக்குப் போனேன்; அன்று அப்பீல் போடவில்லை; கூட்டத்தார் கம்பு வைத்திருந்ததாகக் கீழ்க் கோர்ட்டில் நான் சொல்லவில்லை."

★

அடுத்து, நாராயண ஐயங்கார் சர்க்கார் தரப்பில் சாட்சியாக விசாரணை செய்யப்பட்டார்.

குறுக்கு விசாரணையின்போது, தன்னுடைய வீட்டு சாமான்களைக் கைப்பற்றும்பொழுது, கிராம முன்சீப் இருந்தாரா என்பது தெரியாது; அத்தாட்சியில், எங்கள் தெருக்காரர் கையெழுத்துப் போடவில்லை."

★

பிறகு வக்கீல் ராமகிருஷ்ணய்யர், சர்க்கார் தரப்பு சாட்சியாக விசாரணை செய்யப்பட்டார்.

குறுக்கு விசாரணையின்போது, 'கூட்டமாக வந்தவர்கள், 10 முதல் 15 வயது வரை உள்ளவர்கள்,' என்று சொன்னார்.

★

அடுத்து, வக்கீல் ராஜம் அய்யர், சர்க்கார் தரப்பு சாட்சியாக விசாரணை செய்யப்பட்டார்.

குறுக்கு விசாரணையின்போது, கூட்டம் அதிகமாக இருந்ததால் நான் கீழ்க் கோர்ட்டில் சொன்னது ஞாபகமில்லை என்று சாட்சி கூறினார்; மேலும், என்னுடைய வீட்டுக்கு எதிர்ப்புறமுள்ள நாடார் வீட்டையும், பக்கத்திலுள்ள பிள்ளைமார் வீட்டையும் கூட்டத்தார் தாக்கவில்லை; நான் கிருஷ்ணய்யர் கேட்ட கேள்விகளுக்குத்தான் பதில் சொல்லியிருக்கிறேன்; அந்தக் கேள்விகளும் பதிலும் ஞாபகம் இல்லை; விசாரணை காலத்தில், கிருஷ்ணய்யர், எங்கள் வீட்டுக்குத் தென் பக்கம் 7 அல்லது 8 வீடு

எதிரிகள் சார்பாக சிதம்பரம் குறுக்கு விசாரணை செய்தபொழுது சாட்சி கூறியதாவது:

"எதிரி கைக்கோல் வைத்திருந்தாரென்று நான் கீழ்க் கோர்ட்டில் கூறியிருக்கிறேன்; கீழ்க் கோர்ட்டில், எதிரி டைரக்ஷன் கொடுத்ததாகவும் நான் சொல்லவில்லை."

★

அடுத்து அழகிரி தேவர் சர்க்கார் தரப்பில் சாட்சியாக விசாரிக்கப்பட்டார்.

எதிரிகள் சார்பாக பி. என். கந்தையா பிள்ளை குறுக்கு விசாரணை செய்தபொழுது சாட்சி கூறியதாவது:—

"நான் ஆவுடையாபுரத்தில்-புதுக்கிராமத்துக்கு அரை பர்லாங் தூரத்தில் இருக்கிறேன்; கோவாப்ரேடிவ் ஸ்டோரில் நான் வேலை பார்க்கிறேன்; பத்மநாபய்யர் (இந்த வழக்கில் ஒரு சாட்சி) அந்த ஸ்டோருக்குக் காரியதரிசி; ஸ்டோருக்கு மானேஜர்தான் நிர்வாகி; நான் காரியதரிசிக்குக் கட்டுப்பட்டவன் என்பது சரியல்ல; 3 நாள் கழித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்; விசாரிக்கும்பொழுது அடையாளம் காட்ட முடியுமென்று சொன்னேன்; ஒரு ஆளைத்தான் தெரியுமென்று சொன்னேன்; பிறகு கதவை உடைத்த ஆள்தான் தெரியுமென்று சொன்னேன்; முன்பே அந்த ஆள் தெரியுமென்று சொன்னேன்; 2, 3 வருடமாக எதிரியைத் தெரியுமென்று சொன்னேன்; பெயர் தெரியாதென்று சொன்னேன்; கட்டில்கட்டி கந்த நாடார் மகனென்று சொன்னேன்; சம்பவம் நடந்த 3 நாட்களுக்குப் பிறகு சொன்னேன். தெருவில் போகும்பொழுது எதிரியைத் தெரியும்; எதிரியிடம் பேசியது கிடையாது."

வழக்கறிஞர் வி. என். கந்தப்ப நாடார் குறுக்கு விசாரணை செய்தபொழுது சாட்சி கூறியதாவது:—

"எதிரியை 2, 3 வருடமாகத் தெரியுமென்று நான் கீழ்க் கோர்ட்டில் கூறவில்லை; ஜோலியை முடித்துக் கொண்டு பெரியம்மாள் வீட்டுக்குப் போக புதுக் கிராமத்துக்கு வந்தேன்; நான் நிற்கும்பொழுதுதான் கூட்டம் வந்தது; 4 அல்லது 5 வருடமாக வக்கீல் பத்மநாபய்யர் எங்கள் ஸ்டோருக்குக் காரியதரிசியாக இருக்கிறார்; பத்மநாபய்யர் வீட்டை அடித்தார்கள் என்று நான் இன்ஸ்பெக்டரிடம் சொன்னேன்; தூத்துக்குடி சப்-ஜெயிலுக்கு பால் சப்ளை செய்திருக்கிறேன்; அன்று, பத்மநாபய்யர் வீட்டிலிருந்த ஆட்களை நான் கவனிக்கவில்லை;

(4-ம் பக்கம் பார்க்க)

திரவியம் தேடுகிறார்கள்! — (2-ம் பக்கத் தொடர்ச்சி)

விருத்தி ஏற்பட்டிருக்கிறது என்று காங்கிரசாரின் புள்ளி விபரங்களே கூறுகின்றன!

தொழில் அபிவிருத்தி கார்ப்பொரேஷன் என்ற புதிய அமைப்பு ஒன்று ரூ. 25-கோடி மூலதனத்துடன் அண்மையில் ஆரம்பிக்கப்பட இருக்கிறது. இதன் நோக்கமே, 'கடலுக்கு அப்பால் இருந்து செல்வத்தை உள்ளே இழுப்பது,' என்று கூறுகிறார்கள்!

தேஷ்முக்கின் உலக சுற்றுப் பயணத் திட்டத்தை அறியும்போது, அவர், அமெரிக்க கோஷ்டி நாடுகளில்தான் மூலதன வலை வீசுவார் என்று தெரிகிறது!

ஒப்புக்காக, 'ரஷியாவிலிருந்தும் உதவி வருகிறது,' என்று கூறுகிறார்கள்!

'உதவி' என்ற பெயராலும், 'தொழில் அபிவிருத்தி' என்ற பெயராலும், இப்படி வெளிநாட்டு முதலாளிகளின் சுரண்டலை அனுமதிக்கிறீர்களே—என்று கேட்டால், 'நாடு எப்படி முன்னேறுவது' என்று கேட்பார்கள்!

'முன்னேறிய நாடுகள் எல்லாம், இப்படியா, வெளிநாட்டாரை வரவழைத்தன,'—என்றால், 'குறுகிய நோக்கம்,' என்பார்கள்!

எப்படியோ, நாடு, இந்த ஆதிபத்தியத் தூதுவர்களிடம் சிக்கிவிட்டது! மனம் போனபடி காரியமாற்றுகிறார்கள்! மக்கள் எண்ணத்திற்கு மதிப்பளிக்கவில்லை! மாற்றுநாட்டானுடன் கூடிக் குலவிக் கொண்டே தேசியம் பேசுகிறார்கள்! திரைகடல் ஓடி திரவியம் தேடுகிறார்கள்! கிடைத்தவைகளைத்தை உதவாக்கரை திட்டங்களில் பாழாக்கிவிட்டு, அதன் பின்னர், 'அவசரப்பட்டுவிட்டோம்; மலை போன்ற பண விரயம், காலதாமதம், பொருள் நாசம் ஏற்பட்டுவிட்டது,' என்று அவர்களின் திறமையற்ற போக்கை வெளியிலும் சொல்கிறார்கள்!

இந்த அவலநிலை என்று மாறுமோ! எத்தர்களின் கொட்டம் என்று அடங்குமோ!

—சிவம்

தூத்துக்குடி

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பார்க்கவேயில்லை என்று இழக் கோர்ட்டில் கூறியது ஞாபக மில்லை."

மீண்டும் வழக்கறிஞர் பி. எஸ். சுந்தரம் பிள்ளை, எம். செல்லையா பிள்ளை சார்பாக எதிரிகளுக் காக குறுக்கு விசாரணை செய்த பொழுது சாட்சி கூறியதாவது:-

"13 வருடமாக நான் பாங்கில் வேலை செய்கிறேன்; ஜெயிலுக் கும் எனக்கும் சம்பந்தம் கிடை யாது; எதிரிகள் கைது செய்தி ருந்தது எனக்குத் தெரியாது; நான் ஒரு கட்சியும் இல்லாதவன்; எனக்கு ஒன்றும் தீங்கு கிடை யாது; அன்றைய தினம் நான் போய் இன்ஸ்பெக்டரிடம் சொல்லவில்லை; ஸ்டேஷனில் சம்ப வத்தைப் பற்றி தெரிவித்துக்கொண்டி ருந்தோம்; நான் அன்றையத் தினம் பத்மனாபய்யர் வீட்டிற்குப் போகவேண்டிய அவசியமில்லை"

மூன்றாவதாக சுந்தரம் பிள்ளை சர்க்கார் தரப்பு சாட்சியாக விசாரிக்கப்பட்டார்.

பிறகு எதிரிகள் சார்பாக பி. எஸ். சுந்தரம் பிள்ளை குறுக்கு விசாரணை செய்தபொழுது சாட்சி கூறியதாவது:

"புதுக் கிராமத்தில் தான் இன்ஸ்பெக்டர் கிருஷ்ணய்யர் இருக்கிறார்; நான், யாரும் அந்தநாக பேசிப் பார்க்க வில்லை; சம்பவம் நடந்த தினத் தன்று காலை 9 மணியிலிருந்து 10 மணி வரை நான் புதுக்கிரா மத்திலதான் இருந்தேன்; என் கடையில் இருந்தால், புதுக்கிரா மம் எனக்குத் தெரியாது; கோர்ட் டில் [illegible] எனக் குத் தெரியும்; 'ஆச்சாரியார் ஆட்சி ஒழிக', என்று சத்தம் போட்டார்கள்; 'பார்ப்பனர் ஒழிக; ஆச்சாரியார் ஒழிக,' என் பதில் எனக்கு எந்தவித ஆட்சேபி ரணம் கிடையாது; எதிரி [illegible] சாமி எனக்குத் தெரியும்; சுந்தர வேல் மார்க்கெட்டில் அவர் காய் கறி வியாபாரி; அவருக்கும் எனக்கும் வியாபார தொடர்பு தெரியும்; இன்ஸ்பெக்டர் விசா ரணையின்போது, அவர் காய்கறி வியாபாரி என்று சொல்லியிருக் கிறேன்; எதிரி ஒரு [illegible] குள் வைத்தாரா எனக்குத் தெரி யாது; $1\frac{1}{2}$ மாதத்திற்குப் பிறகு [illegible] போனேன்; இப்பொழுது எதிரி மார்க் கெட்டில் கடை வைக்கவில்லை; இப்பொழுது எதிரியைப் பற்றி தெரியாது."

☆

முக்கிய கவனிப்பு —3-ம் பக்கத்தில் 6-வது கலத் தில், முதல் வரிக்குப் பிறகு விட்டுப் போன பகுதிகள் இங்கு தரப்படுகிறது:—

கலந்து [illegible] முடிகிறேன் தார்."

பின்னர், சுப்ரமணிய ஐயர், சர்க்கார் தரப்பு சாட்சியாக விசாரிக்கப்பட்டார்.

குறுக்கு விசாரணையில் சாட்சி கூறியதாவது:—

"என்னை [illegible] ஆர் [illegible] சொன்னேன்; [illegible] கிருஷ்ணய்யருடன் சென்று [illegible] [illegible] மனார்கள் வீடு மட்டுமே [illegible] நான் இன்ஸ்பெக்டரிடம் [illegible] அவர் ஒருவர் சொன்ன பிறகு நான் போலீசார் [illegible] தெரியும்."

[illegible] சர்க்கார் தரப்பு சாட்சி [illegible]

சாட்சி [illegible] விசாரணை செய்யப்படும்பொழுது கூறிய தாவது:—

"[illegible] [illegible] [illegible] சொல்ல முடி யாது."

சட்டத்திற்கு உட்பட்டே சுட்டனராம்!

பட்டம் தாணுவின் சப்பைக்கட்டு!

திருவனந்தபுரம், செப். 6—

தென் திருவாங்கூரில் நடந்த ஆக. 11-ந் தேதியன்று நடை பெற்ற சம்பவங்கள் குறித்து, திருவனந்தபுரம் மாவட்ட நீதிபதி பகிரங்க விசாரணை செய்து, போலீசார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகம் சரியானதுதான் என்று தீர்ப்பளித்திருப்பதினால், போலீசார் சட்டத்திற்கு உட்பட்டே நடந்து கொண்டிருக்கிறார்கள் என்று தனக்கு பூரண திருப்தி ஏற்பட்டிருப்பதாக திரு—கொச்சி முதன் மந்திரி பட்டம் தாணு பிள்ளை ஒரு நிருபரிடம் கூறினார்.

"போலீசார் சட்டத்திற்கு உட்பட மாவட்ட நீதிபதிதான் பொறுப்பா?" எனக் கேட்ட போது, "அந்த நீதிபதி சுப மாக உத்தரவு தரவில்லை என் றும், சம்பவம் நடைபெற்ற அன்று அவர் அந்த இடத் திலேயே இருக்கவில்லை," என் றும் பட்டம் தாணு குறிப்பிட் டார்.

பி.சோ. கட்சியின் தேசிய நிர்வாகக் குழுவின் முடிவுகள் தனக்கு இன்னும் அதிகாரபூர்வ மாக அறிவிக்கப்படவில்லை என் றும் முடிவுகள் அறிவிக்கப்பட் டாலும், அவை பற்றி தனது மந்திரி சபை, சட்டசபை பி.சோ. கட்சி, மாகாண பி.சோ. கட்சி ஆகியவை விவாதித்து முடிவு காணும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

☆

'பட்டம், விலகி இருக்கவேண்டும்!'

நாகர்கோவில், செப். 6—

புதுடில்லியில் நடைபெற்ற பி.சோ. கட்சியின் தேசிய நிர் வாகக் குழு, பட்டம் ராஜிநாமாச் செய்யவேண்டுமென்று தீர்மா னம் நிறைவேற்றவில்லையாம். இப்பிரச்னை குறித்து இறுதியா கான தீர்மானத்தைத் தாம் வரவேற்பதாயும், அதன் கருத்தை ஒட்டி ஜனநாயகத்தில் பட்டம் தாணுவுக்கு நம்பிக்கை இருக்குமானால், அவர் பதவியி லிருந்து உடனே விலகியிருக்க வேண்டுமென்றும் திரு டி. ஏ. ராமசாமிப் (பிள்ளை) ஒரு அறிக் கையில் கூறியுள்ளார்.

டாக்டர் லோகியா தென் திரு வாங்கூரில் சுற்றுப் பிரயாணம் செய்ய வேண்டுமெனவும், பட் டம் தாணு, தான் முதன் மந்திரி யாயிருப்பதால், 'எதை வேண்டு மானாலும் செய்யலாம்,' என்ற நினைப்பால் ஆட்சி செலுத்துவ தாயும் அவர் மேலும் அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருப்ப தாகத் தெரிகிறது.

☆

தனி மாநாடு கூட்டுகிறார்கள்!

புதுக்கோட்டை, செப். 6—

பி.சோ. கட்சியின் தனி மாநாடு ஒன்றை நம்பூதிரி கூட்டி, திரு-கொச்சி பிரச்னை [illegible] சம்பந்தமான பிரச்னை குறித்தும் விவாதிப்பதென்றும் பி.சோ. கட்சியின் தேசிய நிர்வாகக் குழு தீர்மானித்திருக்கிறதாம்.

நைஜீரியாவில் ... ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

[illegible] அந்த போராட் [illegible] [illegible] தெரிகிறது.

[illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible]

துறைமுகத் தொழிலாளர்கள்

செப். 24ல் வேலைநிறுத்தம் செய்வார்கள்

பம்பாய், செப். 6—

பம்பாய் துறைமுகத் தொழி லாளர்கள் 3,500 பேர் தங் கள் கோரிக்கைகளை நிறை வேற்றவில்லை என்பதற்காக நிர்வாகத்தினரின் போக்கை எதிர்த்து செப்டம்பர் 24-ந் தேதி முதல் வேலை நிறுத்தம் செய்வார்கள் என்று தெரிகிறது.

பம்பாய் போர்ட் டிரஸ்ட் தொழிலாளர்கள் உடனே போனஸ் மெனவும், அலவன்ஸ் தேவை என்றும் கோருகின்றனர்.

இந்த வேலை நிறுத்தத்தில் துறைமுக என்ஜினீயரிங் பிரி வைச் சேர்ந்தவர்களும், சுகா தார சிப்பந்திகளும, கலந்து கொள்வார்கள் என்று தெரி கிறது.

வேலை நிறுத்தம் செய்வ தென்று பம்பாய் போர்ட்டிரஸ்ட் தொழிலாளர் யூனியன் பொதுச் சபைக் கூட்டத்தில் முடிவு செய் யப்பட்டது.

இந்திய சர்க்கார், தொழில் சமரசப் போர்டின் தீர்ப்புகளை மதிக்காது போனால் பம்பாய் துறைமுகத் தொழிலாளர்கள் மட்டுமல்ல, இந்தியாவில் உள்ள தொழிலாளர்கள் அனைவரும் சர்க் காரின் தொழில் சமரச போர் டின் மீது நம்பிக்கை இழந்து விடுவார்கள் என்று தெரிகிறது.

பல்லடத்தில் உழவர் மாநாடு

பல்லடம், செப். 6—

கோவை மாவட்ட உழவர் மாநாடு, இங்கு செப். 4, 5 சனி, ஞாயிறு ஆகிய இரு நாட்களிலும் நடைபெற்றது. முதல் நாள் மாநாட்டிற்கு டாக்டர் பி. வரத ராஜுலு (நாயுடு) தலைமை தாங் கினார். அன்று திரு. வி. டி. நாயுடு உள்ளிட்ட பலர் மாநாட் டில் கலந்து கொண்டனர். உழ வர்கள் பிரச்னை பற்றிய பல தீர்மானங்கள் நிறைவேறின.

அன்று இரவு கோவை கலை மன்றத்தாரின் 'இரத்தக் கண்ணீர்' எனும் நாடகமும் நடைபெற்றது.

செப். 5 ஞாயிறன்று, மாநாடு, தோழர் செனாபதி எம். எல் ஏ., தலைமையில் நடைபெற்றது. தி. மு. கழகப் பொதுச்செயலாளர் அண்ணாதுரை, அ. பொன்னம் பலனார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இரு நாட்களிலும் ஏராளமான உழவர் பெருமக்கள் கலந்து கொண்டனர். (ந. நி.)

அண்ணாமலை நகர் தி. மா. முன்னேற்ற கழகம்

1—9—54 காலை $10\frac{1}{2}$ மணி [illegible] நடைபெற்ற செயற்குழு [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible], செப்டம்பர் இறுதிக்குள் இலவசப் [illegible] தொடக்க விழாவை நடத்துவ தென முடிவு செய்யப்பட்டது.

அன்னிய் ....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அள்ள செயல்,"

என்று தாமோதர மேனன் கூறி னார்.

"அரிசியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது என்ற முடிவு தவறானது; இதனால் உள்நாட்டில் விலை ஏறும் ஏற்படும்; அதன் காரணமாக தென்னாட்டு மக்களின் வாழ்க் கைத் தரம் மிகவும் பாதிக்கப் படும்; பற்றாக்குறைப் பிர தேசத்திலிருந்து வருகிற நாம், கட்டுப்பாடுகள் நீக்கப்பட்ட பின்னரும், சாதாரண மனி தன் வாங்கும் அளவில் விலை வாசிகள் குறையவில்லை என் பதை சர்க்காருக்குத் தெரியப் படுத்த விரும்புகிறேன்,"

என்று திரு—கொச்சியைச் சேர்ந்த தோழியர் அன்னிமஸ்க ரீன்ஸ் கூறினார்.

மைசூரைச் சேர்ந்த குரு பாதசாமி பேசுகையில் குறிப் பிட்டதாவது :—

"அரிசியை ஏற்றுமதி செய் வது அபாயகரமானது; இரண்டு ஆண்டு காலத்திற்கு உள்நாட்டு விலைவாசிகளை கவ னிக்க வேண்டும்; உள்நாட்டுத் தேவைகளுக்கும் போதுமான அரிசி கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்ட பின்னரே ஏற்றுமதி செய்ய வேண்டும்," என்று கூறினார்.

என். எம். ஜெயசூர்யா பேசிய தாவது :—

"நாட்டிலே உணவு உற் பத்தி அதிகமாகி இருக்கிறது என்றபோதிலும், உணவின் தரம் (கலோரி) குறைந்து போயிருக்கிறது என்ற ஐ. நா சபையின் அறிக்கையை அமைச்சர் படித்திருக் கிறாரா?" என்று எடுத்துக் காட்டினார்.

"சர்க்கார் உள்நாட்டிலுள்ள அரிசியின் நிலையைப் பற்றிய புள்ளி விபரங்களைச் சரிவர கொடுக்க வேண்டும்; நாட் டிலே உணவுப் பொருள் கையிருப்பு அதிகமாக இருப் பதோ, அல்லது தேவைக்கு அதிகமாக இருக்கிறது என்கிற நிலையோ அதிக விளைச்சலின் பயன் என்று உறுதியாகக் கூற முடியாது; மக்களின் வாங் கும் சக்தி குறைந்து போன தால்தான், இப்போது அதிக மாக உற்பத்தி ஆகிவிட்டது போல் தோன்றுகிறது; இதை உபரி என்று குறிப்பிட இய லாது,"

என்று பம்பாயைச் சேர்ந்த எஸ். என். மூர் கூறினார்.

அரிசியை ஏற்றுமதி செய் வதென்பது கூடாது என்ப தைப் பலர் வற்புறுத்திய போது, உணவு அமைச்சர் கித்வாய் இடைமறித்தும் பேசுகையில், உணவுப் பொருள்கள் ஏராளமாக கை யிருப்பில் இருக்கிறதென்றும், ஏற்றுமதியினாலோ, வெள்ளப் பெருக்காலோ, உணவுப் பொருளுக்கு நஷ்டம் ஏதும் ஏற்படாது என்றும் கூறினார்.

பார்மோசா மீது...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

[illegible]ரம்.

ப்யூசென் மாகாணத்தில் உள்ள அமாய் எனும் இடத்தைச் சுற்றி உள்ள கம்யூனிஸ்ட் சேனை யின் இராணுவ கேந்திர இடங் கள் மீது சியாங்கின் ஜெட் விமானங்கள் குண்டுகளைப் பொழிந்ததாயும் அதிகார பூர்வ மாக அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

தி. மு. க. பொதுச்செயலாளர்

அண்ணாதுரை

சுற்றுப்பிரயாண நிகழ்ச்சி

9—9—54: விருத்தாசலம்: காலை திருமணம்

15—9—54: மரக்காணம்: காலை திருமணம்

16—9—54: திருவண்ணாமலை காலை திருமணம்

மேல்சீசமங்கலம்: மாலை திருமணம்;

சேத்துப்பட்டு: மாலை $6\frac{1}{2}$ மணிக்கு தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

திருமணங்கள்

9—9—54 காலை $7\frac{1}{2}$ மணிக்கு கிருஷ்ணகிரி வட்டம் காவேரிப் பட்டணத்தை அடுத்த பெரிய [illegible] கிராமத்தில் தோழியர் சகுந்தலை—தோழர் ம. கமலநாதன், தோழர் பிரசன் னம்—தோழியர் வசந்தா திரு மணங்கள் தோழர் என். வி. நட ராசன் தலைமையிலும், தோழர் ஈ. வெ. கி. சம்பத் முன்னிலை யிலும் நடைபெறும்.

* * *

9—9—54 காலை $9\frac{1}{2}$ மணிக்கு செல்லப்பட்டி ராஜாகா, கூடு வாஞ்சேரி கிராமம் மணமகன் இல்லத்தில் தோழர் செ. திரு நாவுக்கரசு—தோழியர் அம்பிகா திருமணம் தோழர் கே. எம். கண்ணபிரான் தலைமையில் நடை பெறும்.

* * *

9—9—54 காலை 10-30 மணிக் குள் மாயவரம் வட்டம், அகர [illegible] மணமகன் இல்லத்தில் தோழர் ஆ. சம்பந்தம்—தோழி யர் சாவித்திரி திருமணம் தோழர் க. அன்பழகன் தலைமை யில் நடைபெறும். தோழர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., தோழியர் பூங்கோதை ஆகியோர் மணமக்களைப் பாராட்டிப் பேசு வர்.

* * *

9—9—54 காலை 9 மணிக்கு கிழவாளூர் மணமகன் இல்லத் தில் தோழர் கே. எம். முத்து சாமி—தோழியர் கமலா திரு மணம் தோழர் ரி. பி. சிற்றரசு தலைமையில் நடைபெறும். தோழர் எம். என். கந்தசாமி, எஸ். பெ. தாமோதரன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

9—9—54 காலை 9 மணிக்கு சோழந்தரம் மணமகன் இல்லத்தில் தோழர் இராமச் சந்திரன்—தோழியர் [illegible] திருமணம் தோழர் க. அன்பழ கன் தலைமையில் நடைபெறும்.

* * *

9—9—54 காலை 11 மணிக்கு [illegible] வட்டம் [illegible] மனை யில் தோழர் கருப்பையா— தோழியர் சின்னப்பிள்ளை திரு மணம் தோழர் என். கிருஷ்ண சாமி தலைமையில் நடைபெறும்.

* * *

9—9—54 காலை $8\frac{1}{2}$ மணிக்கு அண்ணாமலை நகர் தெற்கிருப்பில் மணமகன் இல்லத்தில் தோழர் சாமிதுரை—தோழியர் செல்லம் மாள் திருமணம் நடைபெறும். 'தமிழர் திருமணம்' பற்றி பலர் சொற்பொழிவாற்றுவர்.

சொற் பயிற்சிக் கூட்டம்

8—9—54 மாலை 6 மணிக்கு [illegible] தி. மு. கழகச் சார்பில் தோழர் எம். மோகனன் தலைமையில் 'இந் நாளும் பயனும்' என்பது பற்றி சொற்பயிற்சிக் கூட்டம் நடை பெறும்.

[illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] தெரிகிறது. குறிப்பு: தி. மு. க. [illegible]